உ

அருள்மிகு அங்காளபரமேஸ்வரி துணை



கொட்டூர் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி ஆலய

# திருப்பணி கைங்கர்ய பாலஸ்தாபன விழா அழைப்பிதழ்

நாள் : 02.02.2017,வியாழக்கிழமை (துர்முகி வருடம், தை மாதம் 20ம் தேதி)

நேரம் : காலை 11.00 மணிக்குமேல் 12.30 மணிக்குள்

உ

# கொட்டூர்

## அருள்மிகு அங்காளபரமேஸ்வரி ஆலயம்

2002-ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு 14 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டபடியால் விரைவில் திருப்பணி செய்து மஹாகும்பாபிஷேகம் நடத்த எல்லா மருளாளிகளும் பொறுப்பேற்று நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். தற்பொழுது உள்ள அங்காளபரமேஸ்வரியின் ஒரு தள விமானம் (கோபுரம்) மாற்றி, மூன்று தள விமானமாக (கோபுரமாக) அமைக்கப்பட இருக்கிறது. இக்காரணத்தால் 02.02.2017 அன்று அம்பாளை தற்காலிகமாக ஆலய ஈசான்ய பாகத்தில் ப்ரதிஷ்டை செய்ய உள்ளோம்.

காணிக்கையை வங்கிகளில் பணமாகவோ, கோவில் மேலாளரிடமோ அல்லது குருக்களிடமோ கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் கீழ்கண்ட வங்கிகளில் பணமாக செலுத்தியும், தலைவர், செயலாளர், பொருளாளர் அவர்களில் ஒருவருக்கு விபரம் தெரிவித்தால் உடன் ரசீது அனுப்பி வைக்கப்படும்.

**For online payment**

கொட்டூர் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி சேவா டிரஸ்ட்

**அக்கவுண்ட் நம்பர்: 0456301000009465.**

Type of Account: Savings - IFSC Code : LAVB0000456.

Bank name: லெஷ்மி விலாஸ் பேங்க் , மயிலாடுதுறை

(அல்லது)

கொட்டூர் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி சேவா டிரஸ்ட்

**அக்கவுண்ட் நம்பர்: 34210022739.**

Type of Account: Current - IFSC Code : SBIN0000875.

Bank name: ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, மயிலாடுதுறை.

உ

கொட்டூர் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி ஆலய திருப்பணி

# கைங்கர்ய பாலஸ்தாபன விழா அழைப்பிதழ்

அங்கும், இங்கும், எங்கும் இலாதபடி வியாபித்து உலகத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளும் உய்யும் பொருட்டு பற்பல சக்தி ஸ்தலங்களில் மிக முக்கியமானது நமது கொட்டூர் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி ஆலயம். இந்த பராசக்தி இங்கு வரும் அடியார்களுக்கு எல்லாவிதமான கஷ்டங்களை போக்கி இஷ்டங்களை பூர்த்தி செய்யும் ஆதிசக்தியாக விளங்கி வருகிறாள். அம்பாளின் பேரருள் முழுமையாக எல்லோருக்கும் எப்பொழுதும் கிடைத்துக் கொண்டே இருப்பதற்கு ஆலயத்தில் நித்ய பூஜை, நைமித்ய பூஜை ( திருவிழாக்கள் ), காம்யபூஜை அனைத்தும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேலும் அனைத்து வழிபாடுகளும் சிறப்புற நடத்த செய்து அருளை அருளுவதற்காக அம்பாளின் ஆக்ஞையின் பெயரில் ஆலயத்தை முழுமையாக திருப்பணி செய்து கர்ப்பக்ரஹம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், ராஜகோபுரம், திருசுற்று மதில் சுவர் இவைகளோடு கூட திரிதள விமானம் அமைக்கச் செய்து பஞ்சவர்ண கலாபங்கள் தீட்டச்செய்து, இந்த ஆண்டில் மஹா கும்பாபிஷேகம் செய்திட அம்பாளின் திருவருள் கூட்டி வைத்துள்ளது. அதன்படி திருப்பணி துவங்குவதற்கு மேற்படி ஆலயத்தில் பாலஸ்தாபனம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் வண்ணம்,

**நிகழும் மங்களகரமான துர்முகி வருடம் தை மாதம் 20ம் தேதி (02.02.2017) வியாழக்கிழமை ஷஷ்டி திதி, ரேவதி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை 11.00 மணிக்குமேல் 12.30 மணிக்குள் மேஷ லக்னத்தில் பாலஸ்தாபனம் நடைபெற உள்ளது. பக்தகோடிகள் அனைவரும் கலந்து கொண்டு பாலஸ்தாபனத்தை தரிசித்து தொடர்ந்து நடைபெற உள்ள ஆலய திருப்பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, தன்னை சார்ந்தவர்களை ஈடுபடுத்தச் செய்து எல்லாம் முழுமையாக நடைபெற எல்லாம் வல்ல அம்பாளை பிரார்த்தனை செய்து கேட்டுக்கொள்கிறோம்.**

இங்ஙனம்

**K.C. திருநாவுக்கரசு உடையார்**

தலைவர், அருள்மிகு அங்காள பரமேஸ்வரி சேவா டிரஸ்ட் மற்றும் குலதெய்வக்காரர்கள், கிராமவாசிகள், கொட்டூர்

ஆலய அர்ச்சகர் :

**R. ஜெயராம சிவாச்சாரியார்**

கொட்டூர் - செல்: 8344064894

**KCT. இரகுநாதன்**

செயலாளர் - செல்: 7373735521

**M. இரவிச்சந்திரன்**

பொருளாளர் - செல் : 9443875278

டிரஸ்ட் உறுப்பினர்கள்

**M. கணபதி பிள்ளை**
மேனாங்குடி

**KCT. சுகுமார்**
பெங்களூர்

**G. குமார்**
கொட்டூர்

**G. அருண்குமார்**
மங்கைநல்லூர்

09.01.2017

## அங்காளபரமேஸ்வரி கோவில் திருப்பணி

# ஆலய திருப்பணிகளுக்கு தனியாக நன்கொடை வழங்கலாம். பொருளாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தலாம்.

1. கர்ப்பக்கிரக / மூலஸ்தான கதவு............................ 1,25,000
2. ஆலய கலசம்.(உபயதாரர்: ஜோதிமோகன் & பாலகுமார்)................ 35,000
3. விநாயகர் மண்டபம்.(உபயதாரர்: ஜோதிமோகன் & பாலகுமார்).... . 1,50,000
4. அகோரவீரபத்திரர் மண்டபம்................................ 1,50,000
5. மணல் ..................................................... 75,000
6. செங்கல் .(உபயதாரர்: மேனாங்குடி கணபதி பிள்ளை )..................1,50,000
7. சிமெண்ட் ................................................2,00,000
8. காப்பர் கம்பி ............................................ 45,750
9. கிரானைட் ...............................................52,500
10. மார்பிள் ..............................................1,05,000
11. கருங்கல் ஜல்லி .(உபயதாரர் : ஜெகதீசன்)..........................21,000
12. TMT முருக்கு கம்பி/ கட்டுகம்பி ............................85,000
13. மின் சாதன பொருட்கள் அம்பாள் கருவறை ...............50,000
14. பெயிண்ட் (பொருட்கள்) .................................1,30,000
15. நந்தி பீடம் .(உபயதாரர்: முத்துகுமார் )...........................40,000
16. மடப்பள்ளி சீரமைத்தல் ....................................1,10,000
17. பிரஹார மண்டபம் (வடக்கு) ...........................5,60,000
18. பிரஹார மண்டபம் (தெற்கு) ............................ 5,60,000
19. பிரஹார மண்டபம் (மேற்கு) ............................ 2,50,000
20. வடக்கு பிரஹார மண்டபம் சிற்பங்கள் .................. 5,00,000
21. தெற்கு பிரஹார மண்டபம் சிற்பங்கள் .................. 5,00,000
22. மேற்கு பிரஹார மண்டபம் சிற்பங்கள் .................. 3,00,000
23. மஹா மண்டபம் சீரமைத்தல்................................ 1,15,000
24. மின் சாதன பொருட்கள், பிரஹார மண்டபம்...........2,70,000
25. மேல்நிலை தொட்டி ........................................1,30,000
26. கழிவறைகள் ...............................................1,50,000
27. அசைவ சமையல் கூடம் ................................ 2,00,000
28. சாப்பிடும் இடம் ......................................... 3,00, 000
29. பலிபீடம் ...................................................1,00,000
30. முடி காணிக்கை மண்டபம் ..................................1,25,000
(உபயதாரர் திரு.ஜி.அருண்குமார்,ஆர்.விஷால் & சுனிதா விஷால்)
31. நந்தவனம்.............................................. 90,000

...சுபம்...